சுருக்கம்

பெயர் மாற்றம் - சென்னை மாவட்டம் - சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 'கிரீன்வேஸ் சாலை சந்திப்பில் இருந்து தெற்கு கடற்கரை சாலை திருப்பம் வரை சுமார் 1.6 கி.மீ. வரை உள்ள சாலைக்கு டி.ஜி.எஸ்.தினகரன் சாலை' என பெயர் மாற்றம் செய்ய அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.1) துறை

அரசாணை (நிலை) எண். 23 நாள் 21 .2.2009

மாசி – 9,
திருவள்ளுவர் ஆண்டு – 2040,

படிக்கவும் :

1. அரசாணை (நிலை ) எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள் 30.6.1998.

2. அரசாணை (ப ) எண்.573, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை, நாள் 14.12.2001.

மீண்டும் படிக்கவும்:

3. டாக்டர் பால் தினகரன், சென்னை 28, கடிதம் நாள் 27.3.2008 மற்றும் 15.10.2008.
4. சென்னை மாநகராட்சி ஆணையரின் கடித எண்.நி.ம.உ.து.ந.க.எண். எல்இ.1./ 1206/2008, நாள் 27.01.2009.

*********

ஆணை:

சென்னை மாநகராட்சி ஆணையர் பார்வை.4ல் படிக்கப்பட்ட கடிதத்தில், ஏற்கனவே கிரீன்வேஸ் சாலையின் ஒரு பகுதி 'குமாரசாமி ராஜா' சாலை என மாற்றப்பட்டுள்ளதால், மற்றொரு பகுதியான 'கிரீன்வேஸ் சாலை சந்திப்பில் இருந்து தெற்கு கடற்கரை சாலை திருப்பம் வரை சுமார் 1.6 கி.மீ. வரை உள்ள சாலைக்கு டி.ஜி.எஸ்.தினகரன் சாலை' என பெயர் சூட்டுவதற்கும், இது குறித்து அரசிற்கு உரிய

முன்மொழிவுகள் அனுப்புவதற்கும் சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மான எண். 39/.2009, நாள் 27.01.2009ல் அனுமதி அளித்துள்ளது எனவும், மேற்கண்ட மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் 'கிரீன்வேஸ் சாலை சந்திப்பில் இருந்து தெற்கு கடற்கரை சாலை திருப்பம் வரை சுமார் 1.6 கி.மீ. வரை உள்ள சாலைக்கு டி.ஜி.எஸ்.தினகரன் சாலை' என பெயர் மாற்றம் செய்வதற்கு அரசின் ஆணை வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. முதலாவதாக மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட ஆணைகள் நடைமுறையில் உள்ள சூழ்நிலையில், சென்னை மாநகராட்சி ஆணையரது முன்மொழிவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 'கிரீன்வேஸ் சாலை சந்திப்பில் இருந்து தெற்கு கடற்கரை சாலை திருப்பம் வரை சுமார் 1.6 கி.மீ. வரை உள்ள சாலைக்கு டி.ஜி.எஸ்.தினகரன் சாலை' என பெயர் மாற்றம் செய்ய சென்னை மாநகராட்சிக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

நிரஞ்சன் மார்டி
அரசு செயலாளர்.

பெறுநர்
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை - 3.
சென்னை மாவட்ட ஆட்சியர், சென்னை - 1.
காவல் துறை ஆணையர், சென்னை - 8.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர் (திரு.கே.ஆர்), சென்னை- 9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
தலைமைச் செயலாளரின் தனி செயலர், சென்னை - 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலாளரின் தனி செயலர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( அ.ந.2)துறை, சென்னை – 9.
இருப்பு, கோப்பு . உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.